# நடப்பு நிகழ்வுகள்- செப்டம்பர் 09 - 2017

- உலக முதலுதவி தினம் (World First Aid Day) செப்டம்பர் - 9

- செப்டம்பர் - 9ஆம் தேதியை “இமாலய தினமாக” (Himalaya Diwas) உத்தரகாண்ட் அரசு அனுசரித்து வருகிறது.

- இந்தியாவில் வேளாண் ஆராய்ச்சிகளுக்காக உலகவங்கி நடப்பாண்டில் ரூ1,100 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. அவை 10 வேளாண் கல்லூரிகளுக்கும், 10 கால்நடை மருத்துவ கல்லூரிகளுக்கும் வழங்கப்படும் என்று இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழக துணை தலைமை இயக்குநர் ஜெனரல் நரேந்திர சிங் ரத்தோர் தெரிவித்துள்ளார். இந்தியாவில் ஆண்டுக்கு 30 கோடி டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன் என்றும் தெிவித்தார்.

- டெல்லியில் (08.09.17) நடைபெற்ற 51-வது சர்வதேச எழுத்தறிவு தினவிழாவில் சிறந்த ஆசிரியர்களுக்கு குடியரசு துணைத்தலைவர் வெங்கய்யா நாயுடு விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

- அண்டை நாடான மியான்மரில் உள்ள ராகைன் மாகாணத்தில் ரோஹியங்கா முஸ்லீம் சமூகத்தினருக்கு எதிராக வன்முறை வெடித்தது. அதைத்தொடர்ந்து அச்சமூகத்தைச் சேர்ந்த 14,000 பேர் ஐ.நா மனித உரிமை ஆணையத்தில் அகதிகளாக பதிவு பெற்று இந்தியாவில் வாழ்ந்து வருகின்றனர். மேலும் 40,000 பேர் சட்டவிரோதமாக தங்கியுள்ளதாக கூறப்படுகிறது. அவர்கள் இந்தியாவில் இருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று மத்திய உள்துறை இணையமைச்சர் கிரண் ரிஜிஜீ தெரிவித்துள்ளார்.

- சரக்கு சேவைவரி விதிப்பு முறையில் வரிகணக்குகளை செலுத்துவதற்கு உதவும் GSTN எனப்படும் GST நெட்வொர்க் நிறுவனத்தின் இடைக்கால தலைவராக ஏ.பி.பாண்டே நியயமிக்கப்பட்டுள்ளார். GST நெட்வொர்கின் முதல் தலைவரான நவீன் குமாரின் பதவிகாலம் 2017 ஆகஸ்ட் 29-ம் தேதியுடன் முடிவடைந்தது. அதையடுத்து ஏ.பி.பாண்டேவுக்கு கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

- விமானத்தில் ஊழியர்களுடன் வாய்த்தகராறில் ஈடுபடும் பயணிகளுக்கு 3 மாதங்களுக்கு விமானங்களில் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேபோல் கைகலப்பு அல்லது தாக்குதலில் ஈடுபடும் பயணிகளுக்கு 6 மாத காலமும், உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் செயலில் ஈடுபடும் பயணிகளுக்கு 2 ஆண்டு அல்லது ஆயுட்காலம் முழுவதற்கும் தடை விதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- மதுரையை அடுத்த கப்பலூரில் ரூ7.25 கோடியில் கட்டப்பட்டுள்ள மதுரை காமராஜர் பல்கலைக்கழக உறுப்பு மாதிரி கலை அறிவியல் கல்லூரி கட்டடத்தை தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிச்சாமி (7.9.17) திறந்து வைத்தார்.

- தூத்துக்குடி மாவட்டம் சாயர்புரத்தில் உள்ள போப் கல்லூரியை தன்னாட்சி கல்லூரியாக அறிவிக்கும் நிகழ்ச்சியில் முதல்வர் எடப்பாடி கே.பழனிச்சாமி பங்கேற்றார். தமிழகத்தில் 2011-ம் ஆண்டு உயர்கல்வி படிப்போரின் எண்ணிக்கை 21 சதவீதமதக இருந்தது, தற்போது 44.31 சதவீதமாக உயர்ந்து, கல்வியில் சிறந்த மாநிலமாக தமிழகம் உள்ளதாக முதல்வர் தெரிவித்தார்.

- தழிழை உலக அளவில் பரப்பும் வகையில் ஹிந்தி பிரச்சார சபையைப் போன்று தமிழ் பிரச்சார சபை ஏற்படுத்தப்படவுள்ளது. யுனெஸ்கோ ஆய்வு அறிக்கையின் படி உலகில் அதிகம் பேர் பேசும் மொழிகளில் தமிழ் 20-ஆவது இடத்தில் உள்ளது. தற்போது 9கோடி பேர் தமிழ் பேசுகின்றனர். புதிதாக அமைக்கப்படும் தமிழ் பிரசார சபை மூலம் தமிழை உலக அளவில் 10-ஆவது இடத்திற்கு கொண்டு வரத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் கே.பாண்டியராஜன் தெரிவித்தார்.

- 2019 ஆம் ஆண்டு காமன்வெல்த் பளு தூக்குதல் போட்டியை இந்தியாவில் நடத்துவதற்கு காமன்வெல்த் பளுதூக்குதல் சம்மேளனத்தின் நிர்வாக குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

- 2018 ஆம் ஆண்டு ரஞ்சி கோப்பை கிரிக்கெட் போட்டியில் மேகாலயம், மணிப்பூர், மிஸ்ரோம், சிக்கிம், நாகலாந்து, அருணாச்சல பிரதேசம் ஆகிய 6 வடகிழக்கு மாநிலங்கள் தனித்தனி அணிகளாக சேர்த்துக்கொள்ளப்படும் என்று BCCI நிர்வாக குழு (CAO) (8.9.17) உறுதியளித்துள்ளது.

OXFORD IAS ACADEMY